# ரசிகன் நாவலில் வாழ்வியல்

**மா.மகேஸ்வரி,**
பதிவு எண்: 21212014022012, முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வு மையம்,
ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி – 628002.
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் அங்கீகாரம் பெற்றது,
அபிஷேகப்பட்டி,திருநெல்வேலி-12, தமிழ்நாடு, இந்தியா.
**முனைவர்.ர.செல்வலதா,**
நெறியாளர் & உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை & தமிழாய்வுமையம்,
ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி – 628002.

4

**ஆய்வுச்சுருக்கம்:**

தமிழகத்தில் எண்பது , தொண்ணூறுகளில் தீவிர லட்சியவாத சிறுபத்திரிகை மரபைச் சார்ந்த ஒருவன் இன்றுள்ள கேளிக்கைக் கலாச்சாரத்திற்கு வந்து சேர்கையில் என்னவாகிறான் என்பது இந்நாவலின் மையம். வாழ்க்கைக்குத் தேவையான கருத்துக்கள் பல பத்திரிக்கைகள் , ஊடகங்கள் வழியாக மக்களுக்கு கொண்டு சேர்க்கப்படுகின்றன. **'ரசிகன்'** நாவலில் வரும் சாதிக் என்பவனும் பத்திரிக்கைக்காக வாழ்க்கையை அர்பணித்துக் கொள்கிறான். அன்றைய பத்திரிக்கைகள் மக்களிடம் கருத்துக்களை எடுத்துச் செல்வதை மட்டும் நோக்கமாகக் கொண்டிருந்தனர். ஆனால் இன்றைய பத்திரிக்கைகள் பணத்தை மூலமாகக் கொண்டு வியாபார ரீதியாகவும் , கவர்ச்சியாகவும் மக்களிடம் கருத்தை கொண்டு சேர்க்கின்றனர். சாதிக் மாதிரியானவர்கள் இச்சூழலை எதிர்க்கொள்ளும் போது தன்னை மாற்றுகிறார்களா அல்லது மாறாது நிலைத்து நிற்கிறார்களா என்பதை ஆசிரியர் நாவலில் குறிப்பிடுகிறார். பத்திரிக்கையில் போதுமானஅளவு பணம் வராவிட்டாலும் சாதிக் அத்தொழிலை பார்க்கிறான். வறுமையில் இருக்கும்போதும் சாதிக் பத்திரிக்கையை பணரீதியிலும் கவர்ச்சியாகவும் அச்சிடவில்லை. பத்திரிக்கையில் நேர்மையுடன் பணியாற்றி வரும் சாதிக் சமூக வாழ்க்கை முறையில் எவ்வாறு தனித்துவத்துடன் வாழ்கிறான் என்பதை ஆராய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

**முன்னுரை:**

தமிழ் இலக்கியங்கள் அனைத்தும் மக்கள் வாழ்வதற்குத் தேவையான வழிமுறைகளைக் கூறுகின்றன. மக்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான அறம் , ஒழுக்கம், இல்லறம், பிறனில் விழையாமை, விருந்தோம்பல், ஈகை, கல்வி, மது பற்றிய விழிப்புணர்வு , அரசியல், அறிவியல், மதம் சார்ந்த கருத்துக்கள் ஆகிய கூறுகளை இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன. தற்கால இலக்கிய வடிவங்களில் ஒன்றான நாவல் தற்கால மக்களின் வாழ்க்கை பற்றியக் கருத்துக்களை மக்களிடம் எடுத்துச் செல்வதை நோக்கமாக கொண்டுள்ளது. ரசிகன் நாவல் வழி வாழ்வியல் சிந்தனைகளை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**ரசிகன் நாவலில் சமூகநிலை:**

மக்களின் அடிப்படைத் தேவையான உணவு , உடை, இருப்பிடம் சார்ந்து அவர்களின் வாழ்வியல் அமைகின்றன. அக்காலம் தொட்டு இக்காலம் வரை இலக்கியங்களில் பெரும்பாலும்

மக்களின் வாழ்வியல் பற்றிய கருத்துக்கள் பேசப்பட்டு வருகின்றன. ரசிகன் நாவலில் பசித்தும் புசியாத வறுமைநிலை பற்றியும் , உயிரை வென்ற கடமைபற்றியும் , ஏழ்மையிலும் விருந்தோம்பல் பற்றியும், காதல் உணர்வு பற்றியும் எடுத்துரைக்கப்படுகின்றன.

**பசித்தும் புசியாத வறுமை:**

**'பசித்துப் புசி'** என்பது பழமொழி. பசித்தும் கூட புசிக்க முடியவில்லை என்பது வறுமையின் கோர தாண்டவத்தைக் காட்டுகிறது. இன்றைக்கு சமூகத்தில் எவ்வளவு மாற்றம் ஏற்பட்டாலும் அடிதள மக்களின் வாழ்வியல் என்பது இன்னும் கீழ்மட்டத்தில் தான் இருக்கிறது. ஒருவேளை சோற்றுக்கு கூட அவர்களின் நிலை தர்ணாபோராட்டமாகத்தான் இருக்கின்றது . **'ரசிகன்'** நாவலில் வரும் சாதிக் என்பவனின் குடும்பமும் இத்தகைய வாழ்வியல் பின்னனியைக் கொண்டதாக அமைகின்றது என்று ஆசிரியர் கூறுகிறார்.

இதனை,**"ஸ்கூல்ல இன்னிக்கு சத்துணவு போடுவாங்கன்னு காத்திருந்தேன் அதனால் தான் நான் சீக்கிரம் வரேல்ல என்றும் என் தப்பு தான். அவள் தலையை அடித்துக் கொண்டு அழுதாள். அவள் சாப்பிட்டாளா எனக் கேட்டான். இல்லை என்றாள்"**[1](ர.நா.ப.122).

என்றும், ரசிகன் நாவலில் வரும் சாதிக்கின் தங்கை பள்ளிக்குச் செல்கிறாள். பக்கத்துவீட்டு பெண்ணிற்கு அம்மை நோய் ஏற்பட்டதால் அவளின் குழந்தையை கவனித்து வருகிறாள். குடும்பத்தின் வறுமைக்காக சத்துணவு சாப்பாட்டை எதிர்ப்பார்த்து பள்ளிக்கு செல்கிறாள். அங்கு உணவுக்கிடைக்கவில்லை, வீட்டிற்கு செல்லும் போது குழந்தை கவனிப்பார் அற்று இருப்பதை பார்த்து மனம் நொந்து போகிறாள். இதனை ஆசிரியர் பசித்தும் புசியாது இருக்கும் வறுமை நிலை என்கிறார்.

திருவருட்பாவில் இதனை,

**"வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்"**[2]

என்று வள்ளலார் உள்ளம் பதைபதைத்து பசியால் வாடும் பயிருக்குக்கூட இரங்கும் தன்மை கூறப்பட்டுள்ளது. உடலை வருத்தும் மிகப்பெரிய பிணி பசி பிணி. அந்த பிணியைப் போக்க வேண்டும் என்று வள்ளலார் கூறுகிறார்.

இதனை ஔவையார்,

**"கொடிது கொடிது வறுமை கொடிது**

**அதனினும் கொடிது இளமையில் வறுமை"**[3]

என்று ஔவை பிராட்டி முருகப் பெருமானிடம் எடுத்துரைக்கும் பாடல்வழி பசியின் கொடுமையை அறிய முடிகின்றது. வறுமையிலும் கொடுமை இளமையில் வறுமை என்று வலியுறுத்துகிறார். சாதிக் தங்கை வறுமையால் பசியில் வாடுகிறாள் என்பதை ஆர்.அபிலாஷ் அவர்கள் நாவல் வழி சமுதாயத்திற்கு எடுத்துரைக்கிறார் உலகம் எவ்வளவு முன்னேறினாலும் 'வறுமை' என்பது என்றும் மாறாமல் தொடர்கதையாகிறது.

**ஊயிரை வென்ற கடமை:**

**'காலம் பொன்போன்றது , கடமை கண் போன்றது'** என்பது பழமொழி. மக்கள் அனைவரும் பிறக்கும் போது எதுவும் கொண்டு வரவும் இல்லை , போகும்போது எதுவும் கொண்டு போவதும் இல்லை. மனிதனாய் பிறந்த ஒவ்வொருவருக்கும் ஒரு கடமை உண்டு. அதை நோக்கி ஒவ்வொருவரின் அன்றாட வாழ்வும் தொடர்கிறது.

ரசிகன் நாவலில் வரும் சாதிக் வாழ்வும் அவனது குடும்பத்தை சூழ்ந்தே நகர்கிறது , குடும்பம் சமுதாயத்தில் ஒரு முக்கியமான அங்கம் என்பதால் , குடும்பம் சீர்பட்டால் சமுதாயம் சீர்படும். வீட்டில் அவனுடைய சம்பாத்தியம் தான் குடும்பத்தைக் காப்பாற்றுகிறது. அவன் வறுமையில் இருந்தாலும் பத்திரிக்கைக்காக கடுமையாகப் பணியாற்றுகிறான். கடமை தவறாமல் நடந்துக் கொள்கிறான்.

**“அந்நேரம் சாதிக்குக்கு ஒரு நண்பரிடம் இருந்து தபாலில் பத்தாயிரம் ரூபாய் வந்தது. அவன் பத்திரிக்கை இதழ்கள் பதிப்பத்தில் இருந்து எடுக்க பணமில்லாமல் முடங்கிக் கிடந்தன. அதற்காக பணம் கேட்டு எழுதியதில் ஒரு வெளிநாட்டு நண்பர் உதவி இருந்தார். பணம் கிடைத்ததும் சாதிக் வெளியே போனான்”[4](ர.நா.ப.129).**

என்று ஆசிரியர் கூறுகிறார்.

சாதிக் என்பவன் பத்திரிக்கையில் வேலைப் பார்த்துக் கொண்டிருக்கிறான். நூல்வாசிப்பு , சிறுபத்திரிக்கை அச்சிடுதல் , நூல் அச்சிடுதல் போன்ற பணிகளில் ஆர்வம் கொண்டவன். அதில் அவனுக்கென்று பெரிய வருமானம் கிடைக்கவில்லை. சாதிக் குடும்பத்திற்கு வருமானம் போதுமானதாக இல்லை. சாதிக்கின்தாய் நோய்வாய்பட்டபோதும் அவனால் எதுவும் செய்யமுடியவில்லை. பத்திரிக்கை இதழ்களை பதிப்பகத்தில் இருந்து எடுக்க பணம் கேட்டு நண்பரிடம் இருந்து பெற்ற பணத்தை அவன் அம்மாவுக்கு செலவழிக்க மனம் வரவில்லை. அவன் செய்யும் தொழிலில் கடமையுணர்வோடு இருந்தான் **.“எதுவிதி, டிரீட்மெண்ட் கூட பண்ணாம சாப்பிடாம நாய் மாரி சாவுறதா?”[5](ர.நா.ப.130).**

என்று சாதிக்கின் தம்பி அவனை கடிந்துக் கொள்கிறான். தன் அம்மாவின் உயிரைக் காட்டிலும் அவனுக்கு கடமை உயிராக மாறியது. இறுதியில் சாதிக் அம்மா இறந்துவிட்டாள். அம்மாவின் உயிரைவிட பத்திரிக்கை பணியில் அவனுக்கு இருந்த கடமையை ஆசிரியர் எடுத்துரைக்கின்றார்.

**இதனை,** **“இன்றும் செருப்பறை கேட்டு, விருப்புற்று மயங்கி,**
**வேல் கைக் கொடுத்து, வெளிது விரித்து உடீஇப்,**
**பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி,**
**ஒருமகன் அல்லது இல்லோள்,**
**செருமுக நோக்கிச் செல்க என விடுமே![6]**

போர்ப்பறை ஒலி காதில் கேட்டதும் முகம் மலர்ந்து , அறிவு மயங்கி தெருவில் விளையாடிக் கொண்டிருந்த ஒரே மகனின் கையில் வேல் கொடுத்து போர்க்களம் நோக்கிச் செல்க என அனுப்பி வைத்தாள். அவள் தன் குழந்தையை சிறுவன் என்றும் பாராமல் அரசுக்கு ஆற்ற வேண்டிய கடமையை எண்ணி அனுப்பி வைத்தாள். சங்காலத்தில் கடமை பெரிதாக போற்றப்பட்டது. அன்றைய சூழலில் அவளின் ஒரே மகனை போருக்கு அனுப்பி கடமை தவறாது இருந்தால் அந்தத்தாய்.

**‘ரசிகன்’** நாவலில் சாதிக் என்பவன் பணத்தை அம்மாவின் மருத்துவச் செலவுக்காக எடுத்திருக்கலாம், கடமை உணர்வில் சிறிதும் தவறாததால் சாதிக் தன் தாயை இழந்தான் என்று ஆசிரியர் எடுத்துரைக்கிறார். இன்றைக்கும் கடமை தவறாத நிலையில் அம்மாவை காப்பாற்ற முடியாத சூழலில் மகன் நிற்பதை அறிய முடிகிறது. சாதிக்கைப்போல் கடமை தவறாதவர்கள் சமூகத்தில் ஒருசில இடங்களில் இன்றும் இருந்து கொண்டுதான் இருக்கின்றனர் என்பதை உணரலாம்.

**ஏழ்மையிலும் விருந்தோம்பல்:**

பழங்காலத்தில் விருந்தோம்பல் சிறப்பாக போற்றப்பட்டது. காரணம் வெளியூருக்குச் செல்பவர்கள் உணவை எடுத்துச் செல்லமுடியாது. உணவின்றி வருந்துவோருக்கு உணவளித்தல் இன்றியமையாத அறமாகப் போற்றப்படுகிறது. ரசிகன் நாவலில் சாதிக் குடும்பம் வறுமையிலும் விருந்து அளித்தனர் என்பதை ஆசிரியர்,

"**ஈரமுடிக் கொண்டையில் கட்டியிருந்த துவர்த்தை ஒருகையில் பற்றியபடி ஒரு அலுமினியத் தட்டில் ஆவி பறக்கும் சம்பா புட்டும் , தேங்காய் இட்டுத் தாளித்து வேகவைத்த சிறுபயிலும் நீட்டினாள்"**[7](ர.நா.ப.82).

மேலும், "**பாயில் அமர்ந்து வாங்கி பொறுமையாய் மெல்லத் துவங்கினேன். முழுங்குவதற்கு வெள்ளமாய் சாயாவும் கொடுத்தாள். அதில் நிறைய முறை ஊற்றியெடுத்த தேயிலையின் மரணச்சுவையும், பாலுக்கும் தண்ணீருக்கும் இடைப்பட்ட மணமும் இருந்தது"**[8](ர.நா.ப.82).
சாதிக்கின் குடும்பம் வறுமையுற்ற போதிலும் சாதிக்கின் நண்பன் வீட்டுக்கு வந்தபோது அவனை இன்முகத்தோடு வரவேற்று , அவர்கள் குடிப்பதை அவனுக்கும் கொடுத்து மகிழ்ந்தனர் என்ற விருந்தோம்பும் பண்பு வெளிப்படுகிறது.

**"அகனமர்ந்து செய்யான் உறையும் முகனமர்ந்து**
**நல்விருந்து ஓம்புவான் இல்"[9] (கு.எ.92).**

என்று திருவள்ளுவர் முகமலர்ச்சியோடு நன்முறையில் விருந்தினரைப் பேண வேண்டும் என்று கூறுகிறார். அப்படிச் செய்தால் அவர்கள் வீட்டில் , உள்ளமலர்ச்சியோடு திருமகள் அகலாது தங்கியிருப்பாள் என்றும் கூறுகிறார்.

இதனைப் பாரதிதாசன், **"பொன் துலங்கு மேனி**
**புதுமெருகு கொள்ள முகம்**
**அன்றலர்ந்த செந்தா**
**மரையாக – நன்றே**
**வரவேற்றாள்"[10]**

என்றும் உறவினர்கள், நண்பர்கள் விருந்தினராக வீட்டுக்கு வருவது இயல்பு. அவ்வாறு வரும்போது ஒரு குடும்பத் தலைவி செயல்படும் விதத்தைப் பாரதிதாசன் குடும்ப விளக்கு மூலம் எடுத்துக் காட்டியுள்ளார்.

**'ரசிகன்'** நாவலில் வரும் சாதிக் குடும்பம் வறுமையுற்ற போதிலும் வந்த விருந்தினரை உள்ளன்போடு கவனித்தனர் . **'அறுசுவை'** உணவு படைக்காவிட்டாலும் அவர்களால் இயன்ற உணவை படைத்து மகிழ்ந்தனர். இன்றைய சமூகநிலையில் விருந்தோம்பல் என்பது குறைந்து கொண்டு வருகிறது. ஒருசில இடங்களில் விருந்தோம்பல் இருக்கிறது என்பதை அபிலாஷ் நாவல் வழி சமூகத்திற்கு எடுத்துரைக்கிறார்.

**மறுக்க இயலாத காதல் :**

காதல் என்பது எல்லா உயிர்க்கும் பொதுவானது. உலகில் பிறந்த அனைத்து ஜீவராசிகளுக்கும் இயற்கையாக காதல் உணர்வு உண்டு. யாரும் சொல்லித்தராமல் ஒரு ஆணுக்கு பெண்ணின் மீது வரும் உணர்வு , ஒரு பெண்ணிற்கு ஆணின் மீது வரும் உணர்வு காதல் ஆகும். அன்றில் பறவைகள் தன் இணையை பிரிந்தால் உயிர் வாழாது என்று கூறுகின்றனர். அன்று தொட்டு இன்றுவரை காதல் என்பது அனைவருக்கும் இயல்பான ஒரு உணர்வு.

ரசிகன் நாவலில் வரும் சாதிக் என்பவனும் பல்வேறு இன்னல்களின் போதும் மலையாள பெண் ரெஜினாவின் மீது காதல் கொள்கிறான். அவன் சில ஆடவர்போல் இல்லாமல் தன் காதலை வெளிப்படுத்தாமல் மறைக்கிறான். குடும்பச் சூழலையும் , செய்யும் தொழிலையும் எண்ணி அவளை ஏற்க மறுக்கிறான்.

"**அவளைக் காதலிக்க ஆரம்பித்த நொடிமுதல் ஏதோ பெருந்தவறு செய்துவிட்ட உணர்பு உறுத்திக் கொண்டிருப்பதாய்ச் சொன்னான். தான் ஆற்றில் மூழ்கிற ஒரு ஆள் என்றும், தன் கையைப் பற்றுகிற ஒரு பெண்ணை வேறு வழியின்றி மரணத்தை நோக்கி இழுக்க வேண்டியிருக்கும் என்றான்"**[11](ர.நா.ப.189).

தன் சூழ்நிலைக் காரணமாக காதலை ஏற்க மனம் மறுக்கிறது.

"**இன்னொருபுறம் அவளை மிக உக்கிரமாய் காதலிப்பதாகவும் அவள் தன் வாழ்க்கையில் இருந்து நீங்கினால் அவன் உயிருள்ள பிணம் மட்டும்தான் என்றான்"**[12](ர.நா.ப.189).

என்கிறார் ஆசிரியர்.

ஏழை என்றும் பணக்காரன் என்றும் பாராமல் காதல் யார்மீதும் வரும். சாதிக் தன்னுள் வந்த காதலை தன் வறுமையின் காரணமாக மறுக்கிறான். இருந்தும் அவள் இல்லாமல் உயிர்வாழ முடியாத நிலையை ஆசிரியர் எடுத்துரைக்கிறார்.

இதனைப் பாரதியார்,

> **"காதல் காதல் காதல்**
> **காதல் போயின் காதல் போயின்**
> **சாதல் சாதல் சாதல்"**[13]

என்கிறார். காதல் என்ற உணர்வு இந்த உலகில் அதீதமாக கொண்டாடப்படுகின்ற ஓர் உணர்வாக உள்ளது. அந்த உணர்வை வாழ்வில் ஒரு முறையேனும் அனுபவிக்காமல் மனித வாழ்வு முழுமையடையாது என்கிறார். அந்த உணர்வுக்கு முக்கியத்துவம் கொடுத்து பல நூற்றாண்டுகளாக கவிதைகளும், காப்பியங்களும், பாடல்களும், கதைகளும், நாடகங்களும், திரைப்படங்களும், உலகில் அத்தனை கலை வடிவங்களும் படைக்கப்பட்டுள்ளன. இன்றும் படைக்கப்பட்டு வருகின்றன. காதல் போயின் ஒருவன் சாகும் வரைச் செல்வான் என்கிறார்.

**'ரசிகன்'** நாவலில் வரும் சாதிக்கும் தன் வறுமைநிலையை எண்ணி ரெஜினாவை வெறுக்கிறான். இருந்தபோதிலும் அவன் அடிமனதில் அவளை உக்கிரமாய் காதலிப்பதாகவும் ஆசிரியர் எடுத்துரைக்கிறார். இன்றுள்ள இளைஞர்கள் மத்தியில் சாதிக்கை தனித்துவமான கதாபாத்திரமாக எடுத்துக் காட்டியுள்ளார் ஆசிரியர்.

**தொகுப்புரை:**

சிறுபத்திரிக்கை மரபைச் சார்ந்த ஒருவன் இன்றுள்ள கேளிக்கை கலாச்சாரத்தில் சிக்கி வாழ்கின்றான். பசித்தும் புசியாத வறுமை நிலையில் சாதிக் வாழ்க்கைக் சூழல் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. கடமை என்பது கண் போன்றது. உயிரைவிட கடமை உணர்வில் தவறாததால் சாதிக் அவன் அம்மாவை இழந்து நின்றான். பத்திரிக்கையை விரிவு படுத்த அனுப்பட்ட பணத்தைக் கூட அம்மாவின் மருத்துவ செலவுக்கு எடுத்துச் செல்லாத கடமையுணர்வு காட்டப்பட்டுள்ளது. இன்று விருந்தோம்பல் என்பது ஒருசில இடங்களில் காணப்பட்டாலும் சாதிக் குடும்பம் வறுமையுற்ற போதிலும் விருந்தினரை கவனித்தனர் என்பது விளக்கபட்பட்டுள்ளது. காதல் உணர்வை எடுத்துரைக்கையில் சாதிக்கு ஏற்பட்ட காதலை வறுமையினால் மறுக்கிறான் என்றாலும் மாறாத காதல் உணர்வோடு இருக்கிறான். இன்று ஒரு சிலர் சாதிக் மாதிரியான நிலையில் சமூகத்தில்

இருக்கின்றனர் என்பதை நாவலின் வழி ஆசிரியர் கூறுகிறார்.

**முடிவுரை:**

வறுமை, கடமை, விருந்தோம்பல், காதல் இவையெல்லாம் மனித வாழ்வில் மனிதன் கடந்து செல்லும் பாதையில் அவனின் அனுபவங்களாக நாவல்வழி பதிவு செய்துள்ளார் ஆசிரியர். சமூகத்தில் இத்தகைய சூழலை எதிர்க்கொள்ளும் சாதிக் தன்னை மாற்றிக்கொள்ளாமல் துணிவுடன் போராடி வாழ்க்கை சூழலை எதிர்க்கொண்டான். ரசிகன் நாவல்வழி சாதிக்கின் வாழ்க்கைச் சூழலும் அதன் பின்புலமும் ஆராயப்பட்டது.

**அடிக்குறிப்புகள்:**

1. ஆர்.அபிலாஷ், ரசிகன், ப.எண் - 122, முதல் பதிப்பு – டிசம்பர் 2014, உயிர்மை பதிப்பகம், 11/29 சுப்பிரமணியம் தெரு, அபிராமபுரம், சென்னை – 600 018.
2. உரைவேந்தர் ஔவை.சு.துரைசாமிப்பிள்ளை , திருவருட்பா மூலமும் உரையும் , (ஆறாம் திருமுறை), ப.எ - 62, முதற்பதிப்பு – 2006, கங்கை புத்தக நிலையம், சென்னை.
3. சிதம்பர முதலியார் & பிரதர்ஸ் , தனிப்பாடற்றிரட்டு மூலம் , பி.நா, பா.எ.55., முதற்பதிப்பு, வித்தியா ரத்நாகரம் பிரஸ், சென்னை.
4. ஆர்.அபிலாஷ், ரசிகன், ப.எண் - 129, முதல் பதிப்பு – டிசம்பர் 2014, உயிர்மை பதிப்பகம், 11/29 சுப்பிரமணியம் தெரு, அபிராமபுரம், சென்னை – 600 018.
5. ஆர்.அபிலாஷ், ரசிகன், ப.எண் - 130, முதல் பதிப்பு – டிசம்பர் 2014, உயிர்மை பதிப்பகம், 11/29 சுப்பிரமணியம் தெரு, அபிராமபுரம், சென்னை – 600 018.
6. புலியூர்க் கேசிகன் உரை , பா.எ.279, புறநானூறு மூலமும் உரையும் , முதற்பதிப்பு – டிசம்பர் 2016, இ சாரதா பதிப்பகம் , ஜி – 4 , சாந்தி அடுக்ககம், 3, ஸ்ரீ கிருஷ்ணாபுரம் தெரு , ராயப்பேட்டை, சென்னை.
7. ஆர்.அபிலாஷ், ரசிகன், ப.எண் - 82, முதல் பதிப்பு – டிசம்பர் 2014, உயிர்மை பதிப்பகம், 11/29 சுப்பிரமணியம் தெரு, அபிராமபுரம், சென்னை – 600 018.
8. மேலது, ப.எண் - 82,
9. திருக்குறள் நயவுரை , திருக்குறள் நம்பி தங்க.பழமலை (உ.ஆ) , ப.24., ஆறாம்பதிப்பு 2009, அருண்மொழி வெளியீடு, 150, தெற்குத் தெரு, திருக்கோவிலூர் - 605 757.
10. பாரதிதான் (மூ.ஆ),குடும்பவிளக்கு ப.40., முதற்பதிப்பு – 1960, பாரிநிலையம், 90, பிராட்வே, சென்னை – 600108.
11. ஆர்.அபிலாஷ், ரசிகன், ப.எண் - 189, முதல் பதிப்பு – டிசம்பர் 2014, உயிர்மை பதிப்பகம், 11/29 சுப்பிரமணியம் தெரு, அபிராமபுரம், சென்னை – 600 018.
12. மேலது, ப.எண் - 189,
13. ந.சுப்புரெட்டியார் (உ.ஆ) , குயில்பாட்டு , ப. 29, முதற்பதிப்பு – 1982, பாரிநிலையம் , 90, பிராட்வே, சென்னை – 600108.